# சங்கீர்த்தன மலர்



இந்து சமய அபிவிருத்திச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மதம் இந்து மதம்



இந்துக்கள் "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க " லோகா சமஸ்த சுக்கினோ பவந்து " என்று கூறுகின்றார்கள். ஏனென்றால் நாங்கள் ஒவ்வொரு இதயத்துள்ளும் மத, இன பேதமின்றி இறைவனை காண்கிறோம். ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களுடன் சமரசத்துடன் ஜீவிக்க விரும்புகின்றோம். இறைவன் ஒன்று "ஏகம்சத்," ஒருவன் பரமசிவன் என்று சொல்லுவான். ஒருவன் பரமாத்மன் என்று சொல்வான். இன்னும் ஒருவன் மகாவிஷ்ணு என்று சொல்லலாம். இன்னும் சிலர் பிதா, ஜெஹோவா, அல்லாஹ் முதலியன சொல்லலாம். எல்லாம் அதே இறைவன்தானே. ஆனால் இதற்காக எல்லா மதங்களும் உண்மை என நாம் கூறமுடியாது. உதாரணமாக ஆகாய விமான ரிக்கற் வாங்குபவர் யூ. கே., ஐக்கியராஜ்யம், இங்கிலாந்து, கிரேட் பிரடன் என்று ரிக்கற் கேட்டால் எல்லாம் ஒரு இடம் தானே. ஆயினும் இதற்காக எல்லா ஆகாய விமானங்களும் அங்குதான் சென்றடையும் என கூறமுடியாது. ஏனெனில் சில ஆகாய விமானங்கள் அங்கு செல்ல மாட்டாது. இவ்வகையில் இறைவன் ஒன்று. ஆனால் சகல மதங்களும் உண்மை என்று சொல்ல முடியாது. சில மதங்கள் ஒரே ஒரு பிறப்பு தத்துவத்துடன் இருக்கின்றது. ஆனால் இந்து மதம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்து மதத்தின் மறு பிறப்பு தத்துவம் உண்மையாக இருக்கலாம். அல்லது சில பிறமதங்களின் ஒரு பிறப்பு தத்துவம் உண்மையாக இருக்கலாம். இரண்டு தத்துவங்களும் உண்மையாக இருக்க முடியாது. பசுவதை நல்ல செயலாக இருக்கலாம். அல்லது இந்து மத அடிப்படையில் பசுவதை தவிர்க்க வேண்டிய செயலாக இருக்கலாம். அதற்காக இரண்டு விடயங்களும் சரியான செயல் என கூறமுடியாது. இந்துக்கள் பசுவதையை எதிர்க்க வேண்டும். இந்து மத தத்துவத்தின் அடிப்படையில் யாருக்கும் நிலையான நரகம் கிடைக்க மாட்டாது. ஜீவன் கர்ம வினை கோட்பாடு அடிப்படையில் பல பிறவிக்கு பின் அவன் முக்தி பெறுவான். இறைவன் தாய், தந்தை போல் ஜீவனை தண்டிப்பார், அணைப்பார். நிலையான நரகம் அடிப்படையில் கொடூரமான இறைவனை இந்து மதம் ஏற்றுக்கொள்ளவில்லை. இருக்கு வேதத்தில் "சகல நதிகளும் கடலை சேருவது போல் பல ஆன்மீக பாதைகளும் இறைவனை சேரும்" என கூறப்பட்டுள்ளது. சில விவேகமற்ற தவறான பாதையில் செல்லும் இந்துக்கள் இச்சுலோகம் காரணத்தால் இந்து மத கோட்பாடு எம்மதமும் சம்மதம் (எல்லா மதங்களும் உண்மை) என்றார்கள். இக்கருத்து ஒரு மாபெரும் தவறு. ஏனென்றால் இருக்கு வேத காலத்தில் இந்தியக்கண்டத்தில் இந்துமதம் மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இதனால் இச்சுலோகம் இந்து மதம் சம்பந்தமான பாதைகளை பற்றியே தான் கூறப்பட்டுள்ளது. இவ் இருக்கு வேத சுலோகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் பிற தேசங்களில் இருந்து இறக்கப்பட்ட மதங்களை பற்றி கிடையாது. ஒருவன் " புதிய மதம் தொடங்குகின்றேன். முக்தியடையும் மார்க்கம். தினமும் மூன்று சிறிய பிள்ளைகளை பலி செய்ய வேண்டும்." என்று கூறினால் "இது உண்மை. இருக்கு வேதத்தில் எல்லா மதங்களும் உண்மை என கூறபட்டுள்ளது." என்று சொல்லுவோமா? இல்லை. இம்மார்க்கம் கொடூரமானது. உண்மை இல்லை என்று வலியுறுத்துவோம். ஆகவே இருக்கு வேதம் அடிப்படையில் காலம் காலமாக வந்த சகல மதக் கோட்பாடுகள் உண்மை என்று நாம் கூறமுடியாது. மேலும் சிலர் திருமந்திரத்தில் " ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது எம்மதமும் சம்மதம் என அஞ்ஞானத்துடன் கருதுகின்றார்கள். வேதாந்தம் என்றால் சரி, சித்தாந்தம் என்றால் சரி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றோம். ஒவ்வொரு இதயத்துக்குள்ளும் சமமாக இறைவனைக் காண்கின்றோம். அன்பு காட்டுகின்றோம். ஆனால் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது எம்மதமும் சம்மதம் என்று கூறமுடியாது. திருமந்திரம் 3,000 சுலோகங்கள் சிவஞானம், சிவ பக்தியைப்பற்றித்தான் கூறியுள்ளது. இந்து மதத்தின் மேலான கோட்பாடுகளை அறியாத சிலர் " எம்மதமும் சம்மதம்" என கூச்சலிடுகின்றார்கள். எம்மதமும் சம்மதம் என்ற பிரசாரத்தால் பல இந்துக்களிடையே இந்து மத தத்துவங்கள் மலிவான அபிப்பிராயத்தை உண்டு பண்ணியுள்ளது. எல்லா மதங்களும் உண்மை என்று சொன்னால் இந்து மதத்தைக் காப்பாற்ற முடியாது. "எம் மதமும் சம்மதம்" போலி கொள்கை காரணத்தால் மதமாற்றம் தலைத்தோங்கி விட்டது. "எல்லா மதங்களும் உண்மை". " எல்லோரும் பிறந்த மதத்தை மட்டும் கடைப்பிடியுங்கள்" போன்ற வார்த்தைகளால் இந்து மதம் பலவீனமடைகின்றது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, மாணிக்கவாசகர், ஆதிசங்கர், சைத்தன்யர் எம்மதமும் சம்மதம் என கூறவில்லை. மதமாற்றத்தை தடுத்தார்கள். சுவாமி விவேகானந்தர் கூறினார் "யார் இந்து மதத்தில் இருந்து விலகினாலும் அவர் மீண்டும் இந்து மதத்தில் சேர வேண்டும்". ஒரு பாடசாலை அதிபர் சகல மாணவர்களுக்கும் பேதமின்றி சம அன்பு காட்ட வேண்டும், ஆயினும் இதற்காக எல்லா மாணவர்களுக்கும் சம புள்ளிகளை அவர் கொடுக்க முடியாது. இவ்வகையில் நாங்கள் எல்லோருக்கும் சம அன்பு காட்ட வேண்டும். இன்னும் எம்மதமும் சம்மதம் என கூறமுடியாது. எமது மதம் இந்து மதம்.

"அன்பே சிவம்"

**சுவாமி தந்திரதேவா**
(தலைவர் அகில இலங்கை இந்து
சமய அபிவிருத்திச் சபை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் உணர்வில் இருந்து......




"இந்துக்களின் மத மாற்றத்தின் தாக்கம் குறித்துக் தெரிவிக்கையில், 'இந்து' என்ற எல்லைக்குள்ளிருந்து வெளியேறும் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும், மனிதத்தன்மை குறைவாகக் காணப்படுவதுடன் பகைமை உணர்வும் அதிகளவில் காணப்படும். இந்து மதத்தை விட்டு வெளியேறுவோர் எவராயினும் அது இழப்பு ஆகும். கிறிஸ்தவ மிஷனரிகள் எமது நாட்டிற்கு வந்து எமது முன்னோர்கள் எமது சமயம், மற்றும் ஒவ்வொன்றையும் நிந்தித்தனர். ஆலயங்களுக்கு அருகில் வந்து நீங்கள் சிலைகளை வணங்குபவர்கள் நரகத்திற்குப் போவீர்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ மிஷனரிகள் எம்பக்கம் வரவேண்டாம், யாரும் இந்து மதத்திலிருந்து விலகினால் அவர் இந்து மதத்தில் திரும்பவும் சேர வேண்டும்."

"அனாதைப் பிள்ளைகள் உங்களிடம் தஞ்சம் கேட்டால் கண்டிப்பாக நீங்கள் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கிறிஸ்தவ மிஷனரிகள் அவர்களை எடுத்து விடுவார்கள். கிறிஸ்தவ மிஷனரிகள் சகல இந்து அனாதைப்பிள்ளைகளையும் இந்துக்களுக்குப் திரும்ப கொடுக்க வேண்டும். இது சம்பந்தமான ஒரு ஓயாத கிளர்ச்சி ஏற்பட வேண்டும்."

"இந்து என்ற பெயர் தாங்கிய மனிதனுக்கு ஏற்படும் துன்பம் உங்களது உள்ளத்தை வந்து தாக்கி உங்களது மகனே துன்பப்படுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது தான் - அப்போது மட்டும்தான் நீங்கள் இந்து ஆவீர்கள்."


"இந்து என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே உங்களுக்குள்ளேயே சக்தி மின் அலையைப் போல் பாய வேண்டும். அப்போதுதான் நீங்கள் இந்து ஆவீர்கள்."

**சுவாமி விவேகானந்தர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுக்களைப் பேணுவோம்,

# பசுவதை கொடிய பாவமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதி சங்கரர்

சமய குரவர்கள்



ஸ்ரீ சைத்தன்ய மஹாபிரபு





அருணகிரிநாதர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஒற்றுமைப் பாடல்

ஆரிராரி ராரோ ஆரிராரி ராரி ராரோ
இந்து என்று சொல்லு - நீ இந்துவாக வாழு
நாமெல்லோரும் ஒன்று நாம் வாழுவோம் ஒன்றாக.

உலக அமைதி வரும் உள்ளமெல்லாம் தூய்மை வரும்
அன்பே ஆளவந்தால் அழிவுக்கெல்லாம் முடிவு வரும்
பாரதம் பார்த்தடி கற்பனைகள் இல்லையடி
அஹிம்சை ஆளவந்தால் ஹிம்சைக் கெல்லாம் முடிவு வரும்
(இந்து)

புனிதத் தன்மை வரும் உற்சாகம் ஓடிவரும்
கர்ம யோகத்தினால் தூய்மை உன்னைத்தேடி வரும்
கண்ணன் சொன்னதடி கற்பனைகள் இல்லையடி
தர்மம் ஆளவந்தால் போருக்கெல்லாம் முடிவு வரும் (இந்து)

மாயை மறைந்துவரும் மாயவனை நினைத்திருந்தால்
பாதை தெரிந்துவரும் பரம்பொருளை பற்றுதற்கு
புத்தனை நினைத்துவிடு புத்தனாக மாறிடுவாய்
துறவியர் சொன்னதடி கற்பனைகள் இல்லையடி (இந்து)

தொண்டு உள்ளம் வரும் தியாக மலர் பூத்திருக்கும்
வள்ளல் தன்மையினால் கர்ணனாக உயர்ந்திடுவாய்
இலட்சியப் பிடிப்புவரும் துறவிகளின் நினைவு வரும்
பார்க்கும் இடத்திலெல்லாம் பரம்பொருளின் உருவம் வரும்.
(இந்து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து புரட்சிப் பாடல்

இந்து சமய மக்கள் எல்லாம் ஒன்று சேருவோம்
பந்தத்தோடு இணக்கமாக வாழ்ந்து காட்டுவோம்
எந்த மதமும் இதற்கு ஈடு இல்லை என்னுவோம்
முந்துபுகழ் இந்து தர்மம் முழங்கச் செய்வோம்

ஆதி ஆதி காலம் தொட்டு வந்த மதம் இது
ஆதி மூல நாயகனை கண்ட மதம் இது
ஓதி ஓதி உண்மைதனை உரைத்த மதம் இது
நீதி தேவன் கோயில் கொண்டு தழைத்த மதம் இது

பெற்ற தாயை பிறந்த மக்கள் வெறுப்பதும் உண்டோ
உற்ற தந்தை இல்லை என்று உரைப்பவர் உண்டோ
முற்றும் உணர்ந்த இந்து தர்மம் முறை அறியாமல்
தொற்று கூறும் தீயர் மனம் திருந்த செய்வோம்

அன்புவழி காட்டுவதும் இந்து தர்மமே
இன்பநிலை கூட்டுவதும் இந்து தர்மமே
முன்பு உலகை உயர்த்தியதும் இந்து தர்மமே
துன்பங்களை போக்கியதும் இந்து தர்மமே

உனது நாடு உனது வேதம் உரிமை காக்க வா
உனது மனம் உனது தர்மம் உரிமை காக்க வா
இனிய சமயம் சைவசமயம் என்று சொல்லவா
புனித மதம் இந்து மதம் என்று புகழ வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சோப் பதிகம்

**மாணிக்கவாசகர் சுவாமிகள்**

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்
கறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன் உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்
றஞ்சேல்என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

செம்மைநல் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துக்களின் விழிப்பு மலர்

(ஞானகோஷத்திலிருந்து)

## ஸ்வாமி தந்திரதேவா மகராஜ்

**01. எல்லா மதங்களும் உண்மை என்று நாம் சொல்லலாமா?**

இல்லை, திருமந்திரத்தில் திருமூலர் கூறுகிறார்: "அன்பே சிவம், ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" என்று உலக வாழ்க்கையைப் பொறுத்தவரை சகல ஜீவராசிகளுக்கும் இன, மத, மொழி பேதமின்றி அன்பு காட்ட வேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் ஸ்லோகம் எல்லா இதயங்களிலும் ஒரே ஒரு இறைவன் இருக்கிறார் என்பதன் அர்த்தமாகும். அத்தோடு எல்லா மதங்களும் சமம் என்பது பொருள் அல்ல.

எல்லா மதத் தத்துவங்களும் உண்மையாக இருக்க முடியாது. உதாரணமாக மறு பிறப்புத் தத்துவம் உண்மையாக இருக்கலாம். அல்லது ஒரு பிறவித் தத்துவம் உண்மையாக இருக்கலாம். இரண்டு உண்மை இருக்க முடியாது.

எல்லா மதங்களும் சமம் என்று ஆதிசங்கரர் கூறவில்லை. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மதமாற்றத்தைத் தடுத்தார்கள். சைவத்தைக் காப்பாற்றினார்கள்.

இந்து தத்துவ அடிப்படையில் மனிதனுடைய உண்மையான தன்மை தெய்வீகம். மாயாவின் கனவு காரணத்தினால் அத்தெய்வீகத் தன்மையை ஜீவன் மறந்து விடுகிறான். அனேக ஜன்மங்களின் பின் ஒருவன் தன்னுடைய தெய்வீகத் தன்மையை மீண்டும் அனுபவிக்கிறான்.

**02. சில கிறிஸ்தவ போதகர்கள் சீக்கிரம் இயேசு வருவார் என்று கூறுகிறார்கள். உங்கள் கருத்து என்ன?**

முதலாவது கிறிஸ்தவர்கள் சேர்ச் கட்டவில்லை. சொத்துக்கள் வாங்கவில்லை, இவைகளின் காரணம் என்ன? ""ஜேசு சீக்கிரம் வருகிறார். ஆகவே அதற்கு நேரம் இல்லை." ஆனால் காலப்போக்கில் இயேசு வராததால் கிறிஸ்தவர்கள் சேர்ச் வேண்டும், பாப்பரசர்கள் வேண்டும் முதலியன தீர்மானித்தார்கள். 2000 ஆண்டுகளுக்கு பின் இன்னும் சொல்கிறார்கள். "ஜேசு சீக்கிரம் வருகிறார்" ஆனால் ஜேசு அவ்வாறு வரவில்லை. அண்மையில் சிலர் பிரசாித்தார்கள் - ஜேசு இரண்டாயிரத்தாண்டு வருவார். ஆனால் பைபிளைப் பொறுத்தவரை ஜேசு இரண்டாயிரமாம் ஆண்டில் திரும்புவார் என்ற எவ்வித செய்தியும் காணவில்லை. மேலும் இப்பிரசாரம் சம்பந்தமாக இரண்டாயிரத்தாண்டு உலகம் அழியும் என்று கூறினார்கள். இம் மேற்குறிப்பிட்ட ஏமாற்று முறைகள் பற்றி இந்துக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. சில கிறிஸ்தவ போதகர்கள் கிறிஸ்தவ மதத்தவர்கள் நோயற்ற வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று சொல்கிறார்கள். உங்கள் கருத்து என்ன?**

ஜேசு மறைந்த எழுநூறு ஆண்டுகளின் பின் சைவ நால்வர் அவதரித்தார்கள். ஆயிரக் கணக்கான தேவார திருவாசகங்கள் பாடினார்கள். ஆனாலும் ஜேசுவைப் பற்றி ஒன்றும் பாடவில்லை. திருஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" பாடினார். அரசனுடைய வெப்பு நோய் தீர்ந்தது. அப்பர் சுவாமிகள் "சலம் பூவோடு தூபம்" பாடினார். அவருடைய சூலை நோய் நீங்கியது. அதன் பிறகும் மேலும் 1300 ஆண்டுகள் சென்று கொண்டிருந்தது. இப்பொழுது சிலர் சொல்கிறார்கள் நோய் தீர்க்க வேண்டும் என்றால் "ஜேசுவை மட்டும் கும்பிட வேண்டும்" என்பதே ஒரு பிழையான பிரச்சாரமாகும்.

ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் நீண்ட ஆயுளை அடைவார்கள்; ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் குறைந்த ஆயுளை அடைவார்கள் என்று சொல்ல முடியாது. கிறிஸ்தவ நாடுகளிலே மயானங்கள், ஆஸ்பத்திரிகள் காண முடியவில்லையா?

**04. பைபிளைப் பொறுத்தவரை புதிய ஏற்பாடு பகுதிகள் இயேசு மூலம் மட்டும் இறைவனைச் சேரலாம் என்று கூறப்படுகிறது. இதை ஏற்றுக் கொள்ளலாமா?**

பைபிளைப் பொறுத்தவரை இரண்டு பாகங்கள் காணப்படுகின்றன. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு என்பது யூதர் சமுதாயத்தின் சுமார் 2000 வருஷங்கள் (ஜேசு காலம் வரை) ஒரு சரித்திரம். பழைய ஏற்பாட்டில் கடவுள் ஜெகோவா என்று அழைக்கப்படுகிறார். ஜேசுவின் பெயர் வரவில்லை. இச் சூழ்நிலையில் ஜேசு கிறிஸ்து மூலம் மட்டும் என்னைச் சேரலாம் என்று எவ்வாறு கடவுள் பிரகடனம் செய்ய முடிவும்? அப்படியென்றாலும் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவர்கள் மற்றும் அக்கால முழு உலக மக்கள் எல்லோரும் நரகத்திற்கும் போனார்கள். காரணம் என்னவென்றால் ஜேசுவைப் பற்றிக் கேள்விப்படவில்லை, ஜேசுவை வணங்கவில்லை. படைப்பவர் இவ்வாறான உலகத்தைப் படைப்பாரா? இல்லை. ஆகவே, ஜேசு மூலம் மட்டும் கடவுளைச் சேரலாம் என்ற கொள்கை இந்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

**05. இந்து மதத்தில் மறுபிறப்புத் தத்துவம் உண்டு. கிறிஸ்தவ மதத்தில் ஒரேயொரு ஜென்மம் உண்டு என்று கூறப் பட்டுள்ளது. எது சரியானவை?**

இந்து மதத்தில் மறுபிறப்புத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ளுகின்றன. ஓர் ஜீவன் பிராப்த கர்மவினைக் கோட்பாட்டு அடிப்படையில் ஜென்மம் எடுக்கிறது. ஒருவன் குருடன் அல்லது முடவனாக இருந்தால் சென்ற ஜென்மத்தில் அவனுடைய கொடூரமான செயல்கள்தான் காரணம் என்று சொல்வோம். ஆனால் கிறிஸ்தவ மதத்தத்துவத்தில் பூலோகத்தில் ஜீவனுக்கு ஒரேயொரு பிறப்புத்தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் என்று கூறுகிறது. ஜீவனுக்கு பூலோகத்தில் ஒரேயொரு ஜென்மம் இருந்தாலும் என்ன காரணத்தினால் சிலர் முடவனாகப் பிறப்பார்கள், சிலர் இளம் வயதில் சாகிறார்கள், சிலர் புத்திசாலிகளாக இருக்கிறார்கள், சிலர் செல்வந்தர்களாக இருக்கிறார்கள், சிலர் ஏழைகளாக இருக்கிறார்கள்? ஒரேயொரு ஜென்மம் உண்டு என்ற பைபிள் கொள்கை பிழையானது.

## 06. கிறிஸ்தவ மதத்தில் நிலையான நரகம் உண்டு. இந்து மதத்தத்துவம் அக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுமா?

இல்லை, சாவு நேரத்தில் ஜீவனுக்கு என்ன நடக்கும்? கிறிஸ்தவ தத்துவம் இதைப்பற்றி என்ன சொல்கிறார்கள்? தீர்ப்புத் தினத்தன்று 144,000 பேர் மட்டும் சொர்க்கத்துக்குப் போவார்கள். ஏனையவர்கள் எல்லோரும் நிலையான நரகத்திற்குப் போவார்கள் என்று பைபிளில் குறிக்கப்பட்டுள்ளது. கடவுள் இப்படி செய்வாரா? இல்லை. மேலும் பூவுலகில் மனிதன் ஒரு தரம் மட்டுமே வாழ்ந்து நிரந்தர சொர்க்கம் அல்லது நிரந்தர நரகத்திற்கே செல்லலாம் என்று கிறிஸ்தவ தத்துவம் சொல்கிறது. இது உண்மையாகாது. அது உண்மையாக இருக்குமானால் 50% பாவம் செய்தவன் நிரந்தர சுவர்க்கத்திற்கு செல்ல, 51% பாவம் செய்தவன் மீட்க முடியாத நிரந்தர நரகத்திற்குச் செல்ல வேண்டியதாகிறது. தெய்வீக சட்டமும் நீதியும் இவ்வாறு தொழிற்படுவதில்லை. ஒரு சிறிய குழந்தை வீட்டில் குழப்படி செய்தால் அக்குழந்தையின் தாய் நிலையான தண்டனைக்காக அடுப்பு நெருப்பில் போடுவாளா? இல்லை. தாய் பிள்ளையைத் தண்டிப்பாள். அதன் பிறகு அணைப்பாள். இதைப்போன்று இந்து மத தத்துவம் சாவு நேரம் பற்றி என்ன குறிப்பிட்டுள்ளது.? ஜீவன் அவனுடைய கர்ம வினைப் பலன் படி இன்பமான அல்லது துன்பமான உலகத்திற்குச் செல்லும். அப்புறம் மீண்டும் பூலோக ஜென்மம் எடுக்கும். இந்து மதத்தில் நிலையான நரக தண்டனை கிடையாது. ஞானிகள் மோட்சம் அடைவார்கள்.

## 07. கிறிஸ்தவ மதத்தில் மிருகங்களுக்கு ஜீவன் இல்லையென்றும். இந்து மதத் தத்துவம் என்ன சொல்கிறது?

மிருகங்களுக்குச் ஜீவனுண்டு. இறந்ததன் பின் ஒரு நாய், பூனை, ஆடு எங்கே போகிறது.? கிறிஸ்தவ மதம் இது பற்றி விளக்கவில்லை. நிட்சயமாக ஒரு குதிரை, உதாரணமாக, தன்னுடைய புத்தி அடிப்படையில் சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது. ஆயினும் கடவுள் அக்குதிரையை நரகத்திற்கு அனுப்ப முடியாது. குதிரையின் மூடக் குணத்தை கடவுள் தண்டிக்க முடியாது. இந்து மதம் போதிக்கிறது மிருகங்களின் ஆன்மாக்கள் நிறைய ஜென்மங்களுக்குப்பின் மனித ஜென்மத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. பைபிள் திடமானது என்று கிறிஸ்தவ போதகர்கள் வலியுறுத்துகிறார்கள். உண்மை என்ன?

கிறிஸ்தவ மதத்தின் ஆயிரக் கணக்கான பிரிவுகள் உண்டு. அதாவது ரோமன் கத்தோலிக்கம், ரஷியன் ஓர்த்தோடாக்ஸ், பரட்டஸ்தாந், மெதடிஸ்ற், பிறேஸ்பெதிரியன், பப்திஸ்ட், எபிஸ்கபல், பெண்டிக்கோஸ்ற், குவய்க்கர், ஜேகோவா சாட்சிகள், லூர்த்திரியன், மோர்மன், ஏமிஷ், செவன்த்தே அட்வெந்திஸ்ட் முதலிய பிரிவுகளுக்கு பைபிள் பற்றிப் பொது விளக்கம் இல்லை. ஒவ்வொரு பிரிவும் தங்களுடைய விளக்கம்தான் சரியானது என்று கூறி, ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் இல்லை - ஏனைய கிறிஸ்தவர்களும் நரகத்திற்குப் போவார்கள் என்று வலியுறுத்துகிறார்கள். இத்துடன் பைபிலில் சம்பந்தப்பட்ட விளக்கத்திற்கும் ஒரு தனிப்பட்ட அத்தியாயம் அமைந்துள்ளது. விளக்கங்கள் சில இடங்களில் வித்தியாசமாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக ஒரு அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஜேசு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட ஆட்களுடன் இருந்தார் ஆனால் வேறு அத்தியாயத்தில் அந்நேரத்தில் ஜேசு வித்தியாசமான இடத்தில் வித்தியாசமான ஆட்களுடன், வித்தியாசமான வார்த்தைகள் கூறினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே நிச்சயமாக சில விளக்கங்கள் தவறானது என்பதைக் கட்டாயம் தீர்மானிக்க வேண்டும். அண்மையில் ஆராய்ச்சியில் பெரும்பான்மை "காஸ்பல்கள்" (ஜேசுவின் சரித்திரங்கள்) முழுக்க முழுக்க கற்பனைக்கதைகள் என்பதே அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்துக்கள் இக்கதையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

## 09. இந்து மதத்தில் பல தெய்வர்கள் உண்டு. ஒரு விளக்கம் கூறுங்கள்?

இந்து மதத்தில் நிறைய தேவர்கள் உள்ளனர் ஆயினும் உண்மையில் எத்தனை தேவர்களை வணங்கினாலும் எல்லாம் ஒரு இறைவன்தான். ஒருவன் வேறு வேறு உடுப்புக்கள் மாறி மாறி அணிந்தாலும் அவன் ஒருஆள் தானே. இவ்வகைகள் ஜீவனுடைய வழிபாட்டு வசதிக்காகக் கடவுள் மனிதனுக்குக் பல வடிவங்களில் காட்சி தருகின்றான். கிறிஸ்தவர்கள் ஜேசுவை வணங்குகிறார்கள், மேரியை வணங்குகிறார்கள், காவல் முனிவர்களை வணங்குகிறார்கள், தேவதூதர்களை வணங்குகிறார்கள். ஆனாலும் கிறிஸ்தவ மதத்தில் ஒரேயொரு கடவுள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

## 10. இந்துக்கள் விக்கிரக வழிபாடுகளை மேற்கொள்ளுகிறார்கள். ஒரு விளங்கம் கூறுங்கள்?

இந்துக்கள் விக்கிரஹ வழிபாடு மேற் கொள்கிறார்கள். இவ் வழிபாட்டு முறை சகுண வழிபாடு என்று சொல்லப்படுகிறது. கும்பாபிஷேகம் அல்லது பிரார்த்தனைகள் மூலம் இம் மூர்த்திகளுக்குத் தெய்வீக அம்சம் உண்டாக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்கள் இயேசுவினுடைய சிலையை வணங்குகிறார்கள். சிலுவையை வணங்குகிறார்கள். கிறிஸ்தவர்கள் இயேசு சிலை, சிலுவை முதலியவற்றை ஒரு வெறுங்கல் என்று சொல்லமாட்டார்கள். இவைகள் எங்கள் புனித ரூபங்கள் என்று சொல்வார்கள். தகுதியில்லாத பிரச்சாரத்தை இந்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

## 11. இந்துக்கள் மிருக வடிவமான தெய்வங்களை வணங்கு கிறார்கள்......

இந்துக்கள் சில மிருக வடிவான தெய்வீக உருவங்களை ( விநாயகர், ஹனுமான், நரசிம்மர் ) முதலியன வணங்குகிறார்கள். இது போன்று கிறிஸ்தவர்கள் தேவ தூதர்களை வணங்குகிறார்கள். ஜெகோவா மோசஸ்க்கு ஒரு கட்டளை பிறப்பித்தார். "ஓர் தங்க நாகத்தை உருவாக்கி வணங்க வேண்டும், எனது அனுக்கிரகம் கிடைக்கும்" எனக் கூறினார். ஜானுடைய உபன்யாசத்தில் மிகப் பயங்கரமான தெய்வீக மிருகங்களை பற்றி விமர்சிக்கப்பட்டுள்ளது. ஆகவே தகுதி இல்லாத பிரச்சாரத்தில் இந்துக்கள் ஏமாற்றப்பட வேண்டாம்.

## 12. ஏன் இந்துக்கள் மாட்டிறைச்சி சாப்பிடக் கூடாது?

எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்றாலும் சரி கருணையுள்ளவர்கள் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். திருக்குறளில் திருவள்ளுவர் சொல்கிறார். " கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்". எந்த ஒரு சமயப் போதகராவது பிற உயிர்களுடைய மாமிசத்திலிருந்து தன்னுடைய மாமிசத்தைப் போஷிக்கிறாரோ அவர் நேசம், கருணை பற்றிப் பேசத் தகுதியில்லாதவர்.

சிலர் இருக்கிறார்கள் அதாவது இந்துக்களை ஏமாற்றும் வார்த்தையுடன் " மிருகங்கள் குறிப்பாக பசுவை வெட்டுங்கள், சாப்பிடுங்கள், இது பாவம் இல்லை, கொடூரமானது இல்லை, இது தெய்வ சட்டம்." என்று வலியுறுத்துகிறார்கள். ஆனால் இந்துக்களின் கொள்கை மிருகங்களை குறிப்பாக பசுவை வெட்டக்கூடாது. சாப்பிடக்கூடாது, பாவம் என்பதாகும். இக்கொள்கையை சாத்தான் என்று கிறிஸ்தவ மதபோதகர்கள் விமர்சிக்கிறார்கள். அதாவது பதிலாக அம்மிருகங்களுக்கு அன்பு காட்டினால், சாத்தான் என்று சொல்லுகிறார்கள்! எனவே இந்துக்களே! ஏமாற்றப்பட வேண்டாம்.

## 13. இயேசு கடவுள் என்று இந்துக்கள் ஏற்றுக் கொள்ளலாமா?

ஜேசு சமாதான யுவரசன் என்று இந்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது உதாரணமாக பைபிலில் ஜேசு கூறினார் "உலகத்தில் சாந்தி சமாதானம் ஸ்தாபிப்பதற்கு நான் வரவில்லை. நான் கத்தியோடு வந்திருக்கிறேன். சகோதரன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரனை எதிர்ப்பதற்கு, பிள்ளைகள் பெற்றோருக்கு எதிர்ப்பதற்கு உண்டாக்குவதற்காக நான் வந்திருக்கிறேன்". மேலும் ஜேசு சிலுவையில் இறக்கும் போது "கடவுள் ஏன் என்னை ஏமாற்றுகிறாய், கைவிடுகிறாய்" என்று கூச்சல் அளித்தார். இச் சூழ்நிலையில் ஜேசு உலக காப்பாளர் என்று கூறமுடியாது. இத்துடன் ஜேசு கடவுள் என்று கூறுகிறார்கள். சிலுவையில் மரிக்கும்போது ஜேசு இறைவனைக் கூப்பிட்டார். அவர் கடவுள் என்றால் எந்தக் கடவுளை கூப்பிட்டார்? ஜேசு இறந்த பின் நிறைய கற்பனைக் கதைகள் உண்டாக்கப்பட்டன அதன் பிறகு கிறிஸ்தவ மதம் தோன்றியது அண்மைக்காலத்தில் சில கிறிஸ்தவ மத போதகர்கள் மதமாற்ற நோக்கத்துடன் சில பொருந்தாத பிரசாரங்களை மேற்கொள்கிறார்கள். எனவே இந்துக்களின் புனித மதத்தைத் காப்பாற்ற வேண்டும். இந்து மதத்தின் பெருமையை நன்கு உணர வேண்டும். கிறிஸ்தவ மதத்தின் தவறான பிரசாரம் பற்றி சாத்வீக முறையில் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

## 14. மகாத்மா காந்தி மற்றும் சுவாமி விவேகானந்தர் கிறிஸ்தவ மிஷனரிகளைப் பற்றி என்ன கூறினார்கள்?

மகாத்மா காந்தி கூறியதுடன் "எங்கள் நாட்டிற்கு கிறிஸ்தவ மிஷனரிகள் தூய்மையான சேவையை மேற்கொள்ளவில்லை. மதம்மாற்றும் நோக்கத்துடன் தான் சேவை மேற்கொள்கிறார்கள் என்பது மனஸ்தாபம் தருகிறது". சுவாமி விவேகானந்தர் கூறினார்; "கிறிஸ்தவ மிஷனரிகள் எங்கள் நாட்டிற்கு வந்தார்கள். எங்கள் சமயத்தை நிந்தித்தார்கள். எங்கள் ஆலயங்களுக்குப் பக்கத்தில் வந்து எங்கள் வழிபாட்டு முறைகளை அவமதித்தார்கள். ஆனால் கிறிஸ்தவ மிஷனரிகள் எம் பக்கம் வர வேண்டாம். யார் இந்து மதத்திலிருந்து விலகினால் அவர் மீண்டும் இந்து மதத்தில் சேர வேண்டும்."

## 15. கிறிஸ்தவ போதகர்கள் மதமாற்றம் முயற்சிகளைப் பற்றி சாராம்சத்தில் உங்கள் பதில் என்ன?

தற்போது இந்துக்களை மதம்மாற்ற முயற்சி தீவிரமாக நடக்கிறது. இம்முயற்சி கலாச்சாரத்திற்கு ஒரு புற்றுநோய் போன்றது. இம்முயற்சியை முழுக்க முழுக்க முறியடிக்க வேண்டும். சகல இன மக்களும் அன்புடன், சமாதானத்துடன், சமரசத்துடன் ஜீவிக்க வேண்டும். ஆயினும் தத்துவ ரீதியாக இந்துக்களே! ஏமாற்றப்படவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஜனை செய்வோம்



(1) அசத் தோமா ஸத்கமய
தமஸோமா ஜோதிர்கமய
மிருத்தியோர்மா அமிர்தம்கமய
ஓம் சாந்தி சாந்தி சாந்தி:

(2) குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுர்
குரர் தேவோ மஹேச்வர :
குரு ஸாக்ஷாத் பரம்பிரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

(3) ஓம் பூர்புவஸ்ஸுவ :
தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

(4) நமோ பிரமன்ய தேவாய
கோ பிராமண ஹிதாய ச
ஜகத் ஹிதாய கிருஷ்ணாய
கோவிந்தாய நமோ நமஹ

(5) ஓம் தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய
தீமஹி தந்நோ தந்தி ப்ரசோதயாத்

(6) ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய
தீமஹி தந்நோ ருத்ரா பிரசோதயாத்

(7) ஓம் கார்த்திகேயாய வித்மஹே மகாசேனாய
தீமஹி தன்னஹ சண்முகா ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) ஓம் காத்யாணாய வித்மஹே கன்யாகுமாரி
தீமஹி தந்நோ துர்க்கி பிரசோதயாத்

(9) ஓம் நாராயணாய வித்மஹே வாசுதேவாய
தீமஹி தந்நோ விஷ்ணு பிரசோதயாத்

(10) பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
சஞ்சலங்கள் தீர்ப்பவர் சகலவினை போக்குபவர்
தஞ்சம் என்று வந்தவர்க்கு மிஞ்சி சுகம் அளிப்பவர்
யானை முகங் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
அவல் கடலை சுண்டலும் அரிசி கொழுக்கட்டையும்
ஆவலுடன் தின்னுவார் அல்லல் தீர்க்கும் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்துமந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
சிவாய நம ஓம் சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மைக் காவல் காக்கும் பிள்ளையார்
எலியின் மீது ஏறியே வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
ஔவைக்கு அருள்புரிந்த ஆனைமுகப் பிள்ளையார்
ஔவைக்கனி மாம்பழத்தை மகிழ்ந்தெடுத்த பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

(11) அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளு மடி பரவ
மங்குன் மதிதவழ் மாட வீதி
மருகனிலாவிய மைந்த சொல்லாய்
செங்கையலாற் புனல் செல்வ மல்கும்
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடும்
கணபதீச்சரங் காமுறவே

(12) பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே

(13) மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்திரு – ஆலவாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14) கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதலவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் தோன்றுங்
கோணமா மலையமர்ந்தாரே.

(15) சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

(16) ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா
மாதா பார்வதி பிதமகா தேவா (2)

ஜெய் ஜெய் ஜெய் கணபதிதேவா (2)
கஜானனா கஜானனா
கஜானனா ஹே கணபதிதேவா

(17) பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
மூஷிக வாஹன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமர கர்ணா கஜானனா விளம்பித ஸூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மஹேச்வர புத்ரா கஜானனா
விக்ன விநாயக கஜானனா பாத நமஸ்தே கஜானனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயகணேச ஜயகணேச ஜயகணேச - பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச - ரக்ஷமாம்
கஜமுக கணபதி கணநாதா - விக்ன விநாயக குணநீதா

கணபதி கணபதி பாலய மாம்
கௌரீ தனயா பாலய மாம்
கௌரீ நந்தன கஜவதனா
கணேச வரதா மாம் பாஹி
கஜமுக கஜமுக கணநாதா
கணேச வரதா மாம் பாஹி
கஜானனா ஓம் கஜவதனா
கஜமுக வரத மாம் பாஹி
பக்தஜன ப்ரிய கஜானனா
பார்வதி புத்ரா மாம் பாஹி
பாஹி பாஹி கஜானனா
பார்வதி நந்தன மாம் பாஹி

(18). சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
ஓம் நம சிவாய ஓம் நம சிவாய
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
ஹர ஹர ஹர ஹர ஓம் நம சிவாய
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
ஓம் நம சிவாய ஓம் நம சிவாய
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் சிவாய நம ஓம்
சொல்வோம் சொல்வோம் சேர்ந்து சொல்வோம்
ஓம் நம சிவாய
ஓம் நம சிவாய ஓம் நம சிவாய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19) சிவ சிவ சிவ சிவ சபாபதே -
சிவகாமி ஸுந்தர உமாபதே!
ஹர ஹர ஹர ஹர மஹாதேவா -
பார்வதி ரமணா ஸதாசிவா!

(20) நடராஜா நடராஜா நர்த்தன ஸுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா சிவகாமி ப்ரிய நடராஜா
நடராஜா நடராஜா ஆனந்த தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா தில்லைத் தாண்டவ நடராஜா

(21) சரவணா சிவகுமாரா (2)
சண்முக நாதா ஜெய் ஜெய் சண்முகநாதா (2)
சுப்ரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா (2)
சண்முக நாதா ஜெய் ஜெய் சண்முகநாதா (2)
சரணம் சரணம் சண்முகநாதா (2)

(22) பழனி முருகா வேல்முருகா (2)
சரணம் சரணம் வேல்முருகா (2)
கணபதி சோதர வேல்முருகா (2)
கார்த்தி கேயா வேல்முருகா (2)
சுப்பிரமணியா வேல்முருகா
அர ஹரோஹரா சுவாமி அர ஹரோஹரா (2)
அரோஹரா அரோஹரா - அர ஹரோஹரா (2)

(23) சுப்பிரமண்யம் சுப்பிரமண்யம்
சண்முக நாதா சுப்பிரமண்யம்
சுப்பிரமண்யம் சுப்பிரமண்யம்
சண்முக நாதா சுப்பிரமண்யம
சிவ சிவ சிவ சிவ சுப்பிரமண்யம்
அர ஹர அர ஹர சுப்பிரமண்யம்
சிவ சரவணபவ சுப்பிரமண்யம்
குரு சரவணபவ சுப்பிரமண்யம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(24) அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் வாவா முருகா
இன்பமய ஜோதியே நீ வாவா முருகா
ஈசனுமை பாலகனே வாவா முருகா
உலகநாத மருகனே நீ வாவா முருகா
ஊமைக் கருள் புரிந்தவனே வாவா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வாவா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வாவா முருகா

ஐங்கரனும் கிளையவனே வாவா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா வாவா முருகா
ஓங்காரத் தத்துவனே நீ வாவா முருகா
ஒளவைக்கு உபதேசித்தவனே வாவா முருகா
ஓடிவா நீ ஆடிவா நீ வாவா முருகா
ஆடிவா நீ ஓடிவா நீ வாவா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வாவா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வாவா முருகா

(25) ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா
ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
ஜெய் ஜெய் பவானி மா அம்பே பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா
அம்பே பவானிமா தேவி பவானி மா

(26) துர்க்கே துர்க்கே
துர்க்கே ஜெய ஜெயமா (2)
துர்க்கே துர்க்கே
துர்க்கே ஜெய ஜெயமா (2)
காளி கபாலினிமா (2) துர்க்க பவானிமா (2)
ஜெக தோதாரினிமா (2)
ஜெய ஜெய காளிமா ஜெய ஜெய துர்க்கேமா
ஜெய ஜெய காளிமா ஜெய ஜெய துர்க்கேமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(27) ஜெய் ஜெய் துர்க்கை ஜெய் பவானி
சாம்பவி சங்கரி ஜெய் பவானி
ஜெய ஜெகதம்பே ஜெய மாங்கல்யே
சாம்பவி சங்கரி ஜெய் பவானி
ஜெய ஜெய ஜனனி மகா காளியே
சாம்பவி சங்கரி ஜெய் பவானி

(28) ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தரவதனி சுகுண மனோஹரி
மந்த ஹாச முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே

(ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையான் புகழ் பாடிடவே

(ஓம்)

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவமாடித்தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்

(ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(29) ராம கிருஷ்ணா வாசுதேவநாராயணா ஹரி ஹரி (2)
நாராயணா ஹரிஹரி ஓம் நாராயணா ஹரி ஹரி (2)
விஸ்வரூப வாசுதேவ நாராயணா ஹரி ஹரி
ஓம் நாராயண ஹரி ஹரி ஓம் நாராயணா ஹரி ஹரி
விஸ்வரூப வாசுதேவ நாராயணா ஹரி ஹரி
நாராயணா ஹரி ஹரி ஓம் நாராயணா
ஹரி ஹரி

(30) விட்டல்லா ஹரி விட்டல்லா
விட்டல்லா ஹரி விட்டல்லா
விட்டல்லா ஹரி விட்டல்லா
பாண்டுரங்க விட்டல்லா ஹரி நாராயண
புரந்தர விட்டல்லா ஹரி நாராயண
ஹரி நாராயண பஜோ நாராயண

(31) ஸீதாராம் ஸீதாராம் ஸீதாராம் ஜய ஸீதாராம்
தசரத நந்தன தேசிக ராம் கங்கா யமுனா ஸீதாராம்.

பாஹி ராம பாவன நாம
பல பவ பீம பாஹி ஸ்ரீராம

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(32) ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

பிறவிதோறும் வினைமிகுந்து பெருகின்ற இருளினை
அகலவைக்கும் அருணதீபம் ஓம் நமோ நாராயணாய

ஊறுதுன்பம் உடல்வியாதி ஊடழ்விடாத வறுமையும்
ஆறவைக்கும் அருள்மருந்து ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

ஏக்கமாங் குழிக்குள்ளே இருண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக்கரங்கள் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

சோகமோஹ தாகமீறிச் சோர்வு விஞ்சும் வேளையில்
கருணையான புனிதகங்கை ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

ஜனனமரண பயதரங்க ஸாகரம் கடத்தியே
உடனுவந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

கடுகடுத்து முனைதொடுத்து காலசூலம் சீறுநாள்
உயிர்தடுத்த கவசமாகும் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
உலகெலாம் முழங்க வேண்டும் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(33) ஓம் ஓம் ஓம் நாராயணாய
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணாய
நாராயணாஹரி நாராயணாஹரி
நாராயணாஹரி நாராயணா (2)
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணாய
ஓம் ஓம் ஓம் ஓம் நாராயணாய

(34) கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார் மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்டமாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடன மாடும் கண்ணனாம்

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

(35) மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே.

(36) உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கணல்விழி காய்வதும் காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே

(37) ஓசை யொலியெலா மானாய்நீயே
உலகுக் கொருவானாய் நின்றாய் நீயே
வாச மலரெலாமானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே
தேசவிளக்கெலா மானாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி

## திருவாசகம்

(38) பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

(39) ஒளிவர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

(40) பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த
பிரான்மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள் ஆலிக்கும் அந்தணர்
வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம் பயில
வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

(41) உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

(42) ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலமமர்ந்த பெருமாளே.

(43) ஹரி நாராயண கோவிந்தா ஜெயநாராயண கோவிந்தா (2)
ஹரி நாராயண ஜெய நாராயண (2)
ஹரி கோவிந்தா கோவிந்தா (2)

*-ஹரி நாராயண கோவிந்தா*

தசரத நந்தன கோவிந்தா தசமுகமர்த்தன கோவிந்தா (2)
தசரத நந்தன தசமுகமர்த்தன (2)
ஹரி கோவிந்தா கோவிந்தா (2)

*-ஹரி நாராயண கோவிந்தா*

கோவிந்தா ஹரிகோவிந்தா (2)
கோவிந்தா ஹரிகோவிந்தா

*-ஹரி நாராயண கோவிந்தா*

(44) ஓம் ஜெய் கங்காதர - ஹர சிவ ஜெய் கிரிஜாதீசா
சிவ ஹர கௌரீ நாதா
த்வம் மாம் பாலய நித்யம் த்வம் மாம் ரக்ஷய நித்தியம்
சம்போ க்ருபயா ஜகதீச //
// ஓம் ஹர ஹர ஹர மஹாதேவா//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(45) வான் முகில்வழாது பெய்க மலிவளம்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

(46) நமோ பார்வதி பதயே
ஹர ஹர மஹாதேவ
கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா
வள்ளி தேவசேன கந்த ஸ்மரணம்
ஹர ஹர சுப்பிரமண்யோம்
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

(47) மஹா பிரசாதே கோவிந்தே
நாம பிரமன்னி வைஷ்ணவே
சுவல்ப புண்ணிய வத்தாம் ராஜன்
விசுவாசோநேவ ஜயதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து புரட்சிப் பாடல்

இந்து சமய மக்கள் எல்லாம் ஒன்று சேருவோம்
பந்தத்தோடு இணக்கமாக வாழ்ந்து காட்டுவோம்
எந்த மதமும் இதற்கு ஈடு இல்லை என்னுவோம்
முந்துபுகழ் இந்து தர்மம் முழங்கச் செய்வோம்

ஆதி ஆதி காலம் தொட்டு வந்து மதம் இது
ஆதி மூல நாயகனை கண்ட மதம் இது
ஓதி ஓதி உண்மைதனை உரைத்த மதம் இது
நீதி தேவன் கோயில் கொண்டு தளைத்த மதம் இது

பெற்ற தாயை பிறந்த மக்கள் வெறுப்பதும் உண்டோ
உற்ற தந்தை இல்லை என்று உரைப்பவர் உண்டோ
முற்றும் உணர்ந்த இந்து தர்மம் முறை அறியாமல்
தொற்று கூறும் தீயர் மனம் திருந்த செய்வோம்

அன்புவழி காட்டுவதும் இந்து தர்மமே
இன்பநிலை கூட்டுவதும் இந்து தர்மமே
முன்பு உலகை உயர்த்தியதும் இந்து தர்மமே
துன்பங்களை போக்கியதும் இந்து தர்மமே

உனது நாடு உனது வேதம் உரிமை காக்க வா
உனது மனம் உனது தர்மம் உரிமை காக்க வா
இனிய சமயம் சைவசமயம் என்று சொல்லவா
புனித மதம் இந்து மதம் என்று புகழ வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org